

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| 30.04.2026 | சபை பாடல்களில் 'ராகத்தைவிட' அபிஷேகமே தங்கியிருக்க வேண்டும்! | 18வது வாரம் |
|---|---|---|



வேல்ஸ் நாட்டின் மாபெரும் உயிர்மீட்சிக்கு காரணமாயிருந்த இவான் ராபர்ட்ஸ் அவர்களின் ஊழியத்தில், 16வயது நிரம்பிய ஓர் தாழ்மையான சகோதரி இருந்தாள். அந்த சகோதரியின் பெயர்கூட அனேகருக்குத் தெரியாது. அந்த சகோதரி, *இவான் ராபர்ட்ஸ்* நடத்தும் கூட்டங்களில் பாட்டு பாடுவது வழக்கம். சுவிசேஷ பாடல்களை மிகுந்த தாழ்மையோடும் தியானத்தோடும் பாடுவாள்! இந்த சகோதரியின் பாடலில், அவளது ராகத்தைக் குறித்து இன்றுவரை யாரும் குறிப்பிடவில்லை. ஆனால், அவள் பாடுவது பரிசுத்த ஆவியானவரே பாடுவது போலவும், அந்தப் பாடலின் மூலம் தேவனுடைய நாமம் அதிகமாய் மகிமைப்படுவதையும் கண்ணாரக் கண்டார்கள்! *இவான் ராபர்ட்ஸ்* பிரசங்கிப்பதற்கு எழுந்து வந்து சில வேத வாக்கியங்களையும், சில புத்திமதிகளையும் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் போதே, ஜனங்கள் மிகுந்த கண்ணீரோடு தேவனிடத்தில் மனந்திரும்புவார்கள். ஏனெனில், அந்த சகோதரியின் பாடல், ஆவியின் வல்லமையோடு வெளிப்பட்டு ஜனங்களின் இருதயத்தை ஏற்கனவே உடைத்திருந்தது! *இவான் ராபர்ட்ஸ்* பிரசங்கித்தவுடன் கிட்டத்தட்ட திரள் கூட்டம் அனைவரும் தங்களை கிறிஸ்துவுக்கு கண்ணீரோடு ஒப்புக்கொடுப்பார்கள்!

**- ரத்னம்**